# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST – 2008

## TML 2.21 – GRAMMAR OF TAMIL LANGUAGE

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் பற்றிய நன்னூல் விதிகளைக் கூறி, தற்காலத் தமிழில் அவ்விதிகள் மீறப்பட்டுள்ளவாற்றை இனங்கண்டு அதற்கான காரணங்களையும் ஆராய்க.

02. குற்றியலுகரம் பற்றிய நன்னூல் விதிகளைக் கூறி, அவர் கூறுவன தற்காலத்திற்குப் பொருந்துமோ என ஆராய்க.

03. லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி நன்னூல் கூறுவனவற்றை விளக்கி, தற்காலத் தமிழில் அப்புணர்ச்சி வழங்குமாற்றினைத் தெளிவுபடுத்துக.

04. கொடைப்பொருள் வேற்றுமை, நீங்கல் வேற்றுமை பற்றிய நன்னூலாரின் கருத்துக்களை எடுத்துக்கூறி, இவ்வேற்றுமைகள் தற்காலத்தில் வழங்குமாற்றை விளக்குக.

05. நன்னூல் கூறும் திணை, பால், எண், இட விதிகளைச் சுருக்கமாக விளக்கி, அவற்றின் குறைநிறைகளைத் தற்கால மொழியியல் நோக்கில் ஆராய்க.

06. முதல்வினை, துணைவினை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்கி, கொள், விடு, பார், தொலை ஆகிய துணை – வினைகள் இன்றைய தமிழில் வழங்குமாற்றைப் பரசீலிக்குக.

07. இடைச் சொற்களின் வகை பற்றி, நன்னூல் கூறுவனவற்றை விளக்கி, அவை தற்காலத் தமிழில் வழங்குமாற்றை விளக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கு** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(அ) சார்பெழுத்துக்கள்
(ஆ) ஆக்கப் பெயர்கள்
(இ) மையீற்றுப் பண்புப் பெயர்
(ஈ) வினை முற்றுக்கள் திணை, பால் எண் இடம் உணர்த்தல்
(உ) உடன்பாட்டு, எதிர்மறை வினைகள்
(ஊ) கலப்பு வாக்கியம்

***